ஆழி சர்வதேச தமிழிலக்கிய ஆய்விதழ்
Aazhi International Journal of Tamil Literature Studies
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
E-ISSN: 2583-7931
OPEN ACCESS

# Murugan in Ten Idylls (Pathupattu)

## பத்துப்பாட்டில் முருகன்

S. Manimegalai
*Assistant Professor, Department of Tamil, Marudhar Kesari Jain College for Women, Vaniyambadi, India*

**ச. மணிமேகலை**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரி, வாணியம்பாடி, இந்தியா*

***Article Info:***

Received 12-12-2022 | Accepted 11-01-2023 | Published 31-01-2023
Volume 01 Issue 01 January 2023 | Page No : 27-32

**ABSTRACT**

It is no exaggeration to say that Sangha literature is the cultural treasury of Tamils. Sangha books are praised as the cultural treasury of Tamils as they propose various ways of life like culture, civilization, ethics, natural life, politics, war situation, gift situation, philosophy of Palanthamizhar. Belief in God presents a message that has been rooted and established among the people. And man is by nature to live in conflict with nature. Feelings of awe, beauty and awe in nature created a state of worship. Therefore, worship is a two-way thing with Him. People saw the divine in the natural forces around them. Deities are believed to reside in forest, mountain, water, wood, land, sea, stone etc. Here and there literature also points out norms for people's life. In this way, it examines the places where Murugan, who is the main deity and the Tamil god, resided.

***Keywords:***

*Tiruparangunram, Thiruvaninkudi, Thiruveragam, Thirucheeralaiwai, Palamuthircholai, Palani*

### முன்னுரை

சங்க பாக்களை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என பிரிக்கலாம். அகமும் புறமுமாய் அமைகின்ற நூல்கள் இவைகளாகும். தெய்வ நம்பிக்கை என்பது மக்களிடையே தொன்றுதொட்டு வேரூன்றித் தொடர்ந்து நிலைபெற்று வருகின்றது. மனிதன் இயற்கையோடு போராடி வாழும் இயல்புடையவன் ஆகையால் வழிபாடும் வழிபாட்டிற்குரிய இடங்களும் அவனோடு இரண்டிறக் கலந்த ஒன்றாகவே அமைகின்றது. மக்கள் தங்களைச் சுற்றியுள்ள இயற்கைச் சக்திகளில் தெய்வத்தைக் கண்டனர். காடு, மலை, நீர், மரம், நிலம், கடல், கல், முதலியவற்றில் தெய்வங்கள் உறைவதாக நம்பியுள்ளனர். மக்களது வாழ்விற்கு இன்றியமையாத தெய்வ உணர்வுகளையும், வழிபாட்டு நெறிகளையும் ஆங்காங்கே பத்துப்பாட்டு நூல்கள் சுட்டிக்காட்டுகின்றன. அவற்றில் முருகன், திருமால், சிவன் போன்ற தெய்வங்கள் முதன்மை பெற்றுத் திகழ்ந்துள்ளன. இவைகளில் பெரும்பாலும் முருகனைக் குறித்த செய்திகள் அதிகளவில் இடம்பெறுகின்றன. அந்த வகையில் இலக்கியங்களில் முருகன் குறித்து ஆராய்வதே கட்டுரையின் முதன்மை நோக்கமாகும்

### தொல்காப்பியத்தில் முருகன்

பழந்தமிழகத்தில் பெரும்பான்மையான மக்களால் தமிழ்ப் பெருங்கடவுளாக வழிபடப்பட்டவர் முருகக் கடவுள் ஆவார். இம்முருகனைத் தமிழ்க் கடவுளாகவும், குறிஞ்சிக் கடவுளாகவும் தமிழ் இலக்கண இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. தொல்காப்பியத்தில் இதனை,

**"சேயோன் மேய மைவரை உலகமும்"**[1] **(தொல். 951)**

என்று குறிஞ்சிக்குரிய தெய்வமாக முருகனைக் குறிப்பிடுகிறது.

### முருகனின் பிற பெயர்கள்

முருகனுக்கு பல்வேறு பெயர்கள் உண்டு. அதில் 42 பெயர்கள் வருமாறு, அரன்மகன், ஆசான், ஆண்டலைக் கொடியுயர்த்தோன், ஆறுபடை வீடுடையோன், ஆறுமகன், கங்கைமைந்தன், கடம்பன், கந்தசாமி, காங்கேயன், கார்த்திகேயன், குகன், குமரன், குழகன், குறிஞ்சிவேந்தன், சரவணபவன், சரவணன், சாமி, சிலம்பன், சுப்ரமணியன், சுரேஷன், சூர்ப்பகைவன், செட்டி, செந்திநாதன், செவ்வேள், சேந்தன், சேய், சோமாஸ்காந்தன், தாரகற்செற்றோன், தெய்வானைகாந்தன், புலவன், மஞ்ஞையூர்தி, மயில்வாகனன், மாயோன்முருகன், முத்தையன், முருகன், வரைபகவெறிந்தோன், வள்ளற்பெருமான், வள்ளி மணவாளன், விசாகன், வேலினுக்கிறை, வேள் போன்ற பெயர்களில் சங்க இலக்கியம் முழுவதிலும் ஒன்பது இடங்களில் முருகன் என்ற பெயர் சுட்டப்படுகிறது.சங்க இலக்கியங்களில் முருகனை குறித்து வழங்கும் பெயர்கள் மிகுதியாகும். இடப்பெயர்கள் அனைத்தும் அவற்றின் சூழல்களின் அடிப்படையில் வெவ்வேறாக அமைந்துள்ளன. முருகனின் பெயர்களாக சேவலங்கொடியோன், முதிர்கடவுள், சேய், நெடுவேள், முருகு, அணங்கு, மலைவான், விறல்வேள், மலை உறை கடவுள், சூர் செல்வன், நெடியோன், மால்முருகன் போன்றவைகளாகும்.

## திருமுருகாற்றுப்படையில் முருகன்

முருகப் பெருமான் வரலாறு குறித்து முதன்முதலாக தமிழில் படைக்கப் பெற்ற இலக்கியம் திருமுருகாற்றுப்படையாகும். இவற்றில் முருகப்பெருமான் கோயில் கொண்டுள்ள ஆறுபடை வீடுகளைக் குறித்துத் தெளிவாக எடுத்து கூறுகின்றது.

முருகனை வணங்கி அவன் அருள் பெற்று வந்தான் ஒரு புலவன். அவன் வரும் வழியிலே முருகனின் அருளைத் தேடிச் செல்லும் மற்றொருவரைக் கண்டு, முருகன் இருக்கும் இடங்களையும், அவ்விடங்களுக்குச் செல்லும் வழிகளையும் கூறி ஒருவனை ஆற்றுப்படுத்துவது (வழிபடுத்துவதே) திருமுருகாற்றுப்படையாகும்.

இந்நூலில் திருப்பரங்குன்றம், திருசீரலைவாய், திருஆவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்ச்சோலை ஆகியன முருகனின் அறுபடை வீடுகளாக குறிப்பிடப்பட்டுள்ளன.

**1. திருப்பரங்குன்றம்**

திருப்பரங்குன்றம் மதுரைக்கும் மேற்கில் உள்ளது.

**"வைகறை ………………..**
**கள்கமழ் நெய்தல் ஊதி, எல்படக்**
**கண்போல் மலர்ந்த காமரு சுனைமலர்**
**அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்**
**குன்றுஅமர்ந்து உறைதலும் உரியன்"[2]** **(திருமுருகு. 72 – 75)**

என்னும் பாடலடிகளில், வைகறை பொழுதில் மனம் கமழ்கின்ற மலரில், தேனை உண்டு, சூரியன் உதித்தப் பின்பு தூங்கியெழுந்த மகளிரின் கண்கள் போல மலர்ந்த அழகிய சுனைப் பூக்களை நாடும் அழகிய சிறகுகளை உடைய வண்டுக் கூட்டம் ஆரவாரிக்கின்ற வளம் நிறைந்தது திருப்பரங்குன்றம். அக்குன்றிலே விருப்புடன் கோயில் கொண்டருளி உறைதலுக்கு உரியவன் முருகன் ஆவான்.

**2. திருச்சீரலைவாய்**

திருச்சீரலைவாய் என்று சங்க காலத்தில் முருகு வழிபாட்டுத் தலமாகப் போற்றப்பட்ட திருச்செந்தூர் முருகனின் இரண்டாம் படைவீடாகும். இத்தலத்தை 'அலைவாய்' என்று சங்க நூல்கள் குறிப்பிடப்படுகின்றன.

இதனை,

**"அலைவாய் சேறலும் நிலைஇய பண்பே"[3]** **(திருமுருகு. 125)**

எனும் அடியில் திருமுருகாற்றுப்படை திருச்செந்தூர் தலத்தைக் குறிப்பிடக் காணலாம். இதனை,

**"உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்**
**அலைவாய்ச் சேறலும் நிலை இய பண்பே"[4]** **(திருமுருகு. 124 – 125)**

என்னும் பாடலடிகளில், சான்றோர்களால் புகழ்ந்துரைக்கப்பட்ட மிக உயர்ந்த புகழுடைய நாமனூர் அலைவாய் என்னும் பெயருடைய திருத்தலத்தில் முருகன் உறைகின்றான்.

மேலும்,

**"திருமணி விளக்கின் அலைவாய்**
**செருமிகு சேஎயொடு உற்ற சூளே"[5]** **(அகம். 266 : 20 – 21)**

என்னும் பாடல் வரிகளில், அலைவாய் குறித்த சிறப்பினை காண முடிகின்றது. திருச்சீர் அலைவாயில் கோயில் கொண்ட முருகன், அடியார்க்கு அருள்புரிய எழுந்தருளும் யானையினது இயல்பும், ஆறு திருமுகங்களின் செயல்களும், அவற்றிற்கு ஏற்ப பன்னிரண்டு திருக்கரங்கள் ஆற்றும் செயல்களும் முருகப்பிரான் எழுந்தருளியுள்ள தோற்றமும் குறித்துக் கூறப்பட்டுள்ளன.

**3. திருவானின்குடி (பழனி)**

திருஆவினன் குடி என்னும் பழனி முருகனின் ஆறுபடை வீடுகளில் மூன்றாவது படைவீடாகும். இம்மலைக்குச் செல்லும் முன் சரவணப் பொய்கை அருகே 'திருஆவினன் குடி' கோயில் உள்ளது என அறிய முடிகின்றது.

முருகன் குடிகொண்ட இத்தலம் தமிழர் தம் வரலாற்றில் தனிப்பெரும் புகழ் பெற்று விளங்குகின்றது. பழனியைப் 'பொதினி' என்றும் அக்காலத்தில் வழங்கி வந்துள்ளனர். இதனை,

**"அறு கோட்டு யானை பொதினி ஆங்கண்"[6]** **(அகம். 1 : 4)**

என்றும்,

**"முழவுறழ் திணிதோள் நெடுவே ளாவி**
**பொன்னுடை நெடுநகர்ப் பொதினி"[7]** **(அகம். 61 : 15 - 16)**

என்னும் பாடலடிகளில், திருஆவினன் குடிக்கு பொதினி என்றும், பொதினியில் எழுந்தளியிருக்கும் முருகனை வழிபடும் முனிவர்களின் ஒழுக்கமும், தேவருடன் முருகனை வணங்க வரும் மகளிர் தம் வனப்பும், தேவரைக் குறித்த செய்திகளும் இடம் பெற்றுள்ளன.

முருகப் பெருமானை இடையறாமல் நினைக்கும் முனிவர்கள் முன்னே செல்ல அவர்களைப் பின்பற்றிக் கந்தவர்களும், அவர்தம் மகளிரும் இனிய யாழை மீட்டிப் பாடிக்கொண்டே பின்னால் வர, அவர்களுக்குப் பின்னால் திருமால், சிவபொருமான், இந்திரன் ஆகிய தேவர்கள் தொடர்ந்து செல்கின்றனர். இதனை,

**"தாஇல் கொள்கை மடந்தையொடு சிலநாள்**
**ஆவினன்குடி அசைதலும் உரியன் அதாஅன்று"[8]** **(திருமுருகு. 175 – 176)**

என்னும் பாடலடிகளில், திருஆவினன்குடி என்னும் ஊரிலே முருகன் உறைந்குள்ளதாக நக்கீரர் உரைத்துள்ளார்.

**4. திருவேரகம்**

'திருஏரகம்' என்பதனை, 'திருவேரம்' என்றும் குறிப்பிடவர். அறுபடை வீடுகளில் நான்காம் படை வீடாகும். முருகன் தன்னுடைய தந்தைக்கு உபதெசம் செய்த தலமாகும். திருஏராகத்திற்கு சுவாமிமலை என்ற வேறொமு பெயரும் உண்டு.

திருவேரகத்தில் இருக்கும் முருகனை மக்கள் நீராடி நனைந்த ஆடையை உடம்பிலே உடுத்தியும், தலைக்கு மேல் குவித்த கையினை உடையவர்களாய் முருகனைப் புகழ்ந்து சரவணபவ என்னும் ஆறெழுத்து மந்திரத்தை வாயாரக் கூறி மணம் மிகுந்த மலர்களைத தூவி வணங்கி மகிழும் சுவாமிமலையில் கோயில் கொண்டிருக்கும் முருகப்பெருமானை,

**"விரைஉறு நறுமலர் ஏற்றிப் பெரிதுஉவந்து**
**ஏரகத்து உறைதலும் உரியன்"[9]** **(திருமுருகு. 188 – 189)**

என்னும் பாடலடிகளில் மூலம் அறியலாம். திருவேரகம் என்பது தஞ்சை வட்டாரத்தில் காவிரி கரையில் உள்ள சுவாமிமலை என்று கூறுகின்றனர்.

**5. குன்றுதோறாடல்**

குன்றுதோறாடல் முருகனுக்குரிய ஐந்தாம் படைவீடாகும். முருகப் பெருமான் பல குன்றுகளிலும் எழுந்தளியுள்ளான். குன்று இருக்கும் இடமெல்லாம் குமரன் இருப்பான் என்பார்கள். அனைத்துக் குன்றுகளையும் ஒரே தொகுதியாக்கி குன்றுதோறாடல் என்று கூறுகின்றனர்.

முருகனுக்கு கொடியால் பூசை செய்யும் போது வேலன், பச்சிலைக் கொடியால் நல்ல மணமுடைய சாதிக்காய் இடைஇடையே சேர்த்து, அதனோடு அழகிய வடிவுடைய தக்கோலக்காய், காட்டு மல்லிகை, வெண் தாளிகை முதலானவற்றை சேர்த்துக் கட்டிய மாலையை உடையவனாய் நிற்க, நல்ல வாசனை வீசும் சந்தனத்தைப் பூசிய மார்பினை உடையவர்கள் முருகனுக்கு பூசை செய்வதை,

**"கொடுந்தொழில் வல்வில் கொலைஇய கானவர்**
**நீடுஅமை விளைந்த தேக்கண் தேறல்**
**குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து**
**தொண்டகச் சிறுபறைக் குரவை அயர"[10]** **(திருமுருகு. 194 – 199)**

எனவரும் அடிகளில் மூங்கில் குழாய்களில் வைத்த கள்ளினை உண்டு, தொண்டக வாத்தியத்தை அடித்து தாளத்திற்கு ஏற்ப குரவைக் கூத்து ஆட, முருகக் கடவுள் அதனைக் கண்டு களிப்பதற்காக எழுந்தருளியுள்ளான். என்பதை நக்கீரர் எடுத்துரைத்துள்ளார். குன்றுதோறாடல் என்பது இயற்கை வளமும் எழிலும் நிறைந்த மலைகளாகும். முருகன் குறிஞ்சி நில தெய்வமாதலால் மலைகள் எல்லாம் முருகனுக்கு உரிய இடமாக கருதப்படுகின்றது. ஆகையால்தான்,

**"குன்று இருக்கும் இடம் எல்லாம் குமரன் இருக்கும் இடம்"**

என்பார்கள்.

**6. பழமுதிர்சோலை**

பழமுதிர்ச்சோலை என்னும் பழம்பெருந்தலம் முருகனின் ஆறாம் படைவீடாகும். இத்தலம் தற்போது அழகர் கோயில் என்று அழைக்கப்படுகிறது.

முருகப் பெருமான் மகைக்கடவுள் என்பதால் மலையிலிருந்து வரும் அருவியின் சிறப்புக் குறித்தும், பொன்னும் மணியும் போன்ற நிறமும், வாழையின் அடிமரம் ஒடியவும், இளநீர் குலை உதிரவும், மயில், கரடி, கோழிகள், பன்றியும் மலை உச்சயிலிருந்து கீழே விழுந்ததை குறித்து,

**"பெருங்கல் விடர்அளைச் செறிய கருங்கோட்டு**
**ஆமா நல்ஏறு சிலைப்ப சேண்நின்று**
**இழுமென இழிதரும் அருவி**
**பழமுதிர்சோலை மழைகிழ வோனே"[11]** **(திருமுருகு. 314 – 317)**

என்னும் பாடலடிகளில், மலை உச்சியிலிருந்து இமும் என்னும் ஓசையுண்டாகக் குதிக்கும் அருவியையுடையதும், பழம் முற்றிய சோலைகளையுடைய மலையில் முருகன் பெருமான் உறைகின்றான்.

## திருமுருகாற்றுப்படை குறிப்பிடும் முருகனுக்குரிய வழிபாட்டு முறை

பண்டைய தமிழர்களிடம் தெய்வங்களுக்கு உயிர்களை பலியிடும் வழக்கம் இருந்துள்ளன. தெய்வங்களுக்கு மலர்களிட்டும், ரத்தம் கலந்து அரிசியைப் பலியாக வைத்தும் வணங்கினர்.

சிறிய தினை அரிசியை மலரோடு கலந்து வைத்தும், ஆடறுத்தும், கோழி கொடியோடு முருகனை வரிசையாக நிறுத்தியும் ஊர்கள் தோறும் முருகனுக்கு சிறந்த விழாக்களைச் செய்வர் என்று திருமுருகாற்றுப்படை சுட்டுகின்றது. இதனை,

**"சிறுதினை மலரோடு விரைஇ, மறி அறுத்து**
**வாரணக் கொடியோடு வயிற்படநிறீஇ**
**ஊர்ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்"[12]** **(திருமுருகு. 218 – 219)**

என்னும் பாடல் அடிகளில், மிகுந்த வலிமை உடைய பெரிய கால்களை உடைய நன்கு கொழுத்த ஆட்டுக்கடாவை வெட்டுவார்கள். அதன் குருதியுடன் தூய வெள்ளையான அரிசியைக் கலந்து பலியாகப் படைப்பர். மேலும்,

**"மதவலி நிலைஇய மாத்தாள் கொழுவிடைக்**
**குருதியொடு, விரைஇய தூவெள்ளரிசி**
**சில்பலிச்செய்து, பல் பிரப்பு இரீஇ"[13]** **(திருமுருகு. 232 – 234)**

என்னும் வரிகளில், உயிர்ப்பலியிட்டு முருகனை வழிபட்ட செய்தியைக் கூறுகின்றன. முருகனுக்கு ஆடுவெட்டிப் பூசை போடுதல் அக்கால வழக்கம் என்று திருமுருகாற்றுப்படை குறிப்பிடுகின்றது. இவற்றின் எச்சமாக தற்காலத்திலும் பெரிய தள்ளாடி என்னும் ஊரில் ஆடி மாதத்தின் முதல் நாளில் முருகனுக்கு ஆட்டுக்கிடாவை பலியிட்டும், ஒரு முழு உயிர் உள்ள கோழியை முருகனின் கோயில் முன்னாள் நடப்பட்ட சூழத்தில் செருகியும் வழிபடுகின்றனர்.

## வெறியாட்டு நிகழும் இடங்கள்

திருமுருகாற்றுப்படையில் வேலன் வெறியாடல் சிறப்பிடம் பெறுகிறது. பூசாரி தன் கையில் வேலை வைத்துக் கொண்டு ஆவேசம் வந்து ஆடுவான். அதனால் அவனுக்கு வேலன் எனப் பெயர் உண்டாயிற்று. ஆட்டைப் பலி பொடுத்து வேலன் ஆடும் ஆட்டத்தை வெறியாட்டு என்பர்.

குறிஞ்சி நில மக்களுக்கு ஏதாவதொரு நோய் ஏற்பட்டால் அந்நோய் இறைவனால் வந்தது என்று எண்ணி அக்கடவுளை திருப்தி செய்ய ஒரு களம் அமைத்துப் பூசையிட்டு ஆடிப்பாடி வழிபாட்டு மகிழ்வர். இதனை தொல்காப்பியர்,

**"வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்**
**வெறியாட்டு அயர்ந்த காந்தளும் உறுபகை"[14]** **(தொல். 1009)**

என்னும் வரிகளில் வெறியாட்டைக் குறித்து கூறியுள்ளார்.

## வெறியாட்டு களம் நிகழும் இடம்

தெய்வத்தைச் சாந்தி செய்து பூசிப்பதற்கும் வெறியாடுவதற்கும் பயன்படும் இடத்திற்குக் களம் என்று பெயர். வெறியாட்டு அயரும் களத்தையே வெறிக்களம் அல்லது வெறியயர் களம் எனச் சுட்டுவர். வெறியாடும் களத்தை அமைப்பவன் வேலன், வேலன் பெரும்பாலும் தனித்தும் சில சமயக் குறமகளிடருடன் வழிபடுதல் வெறியயர்தலில் இடம் பெறுகிறது. வேலன் வெறியர்தலை,

- மன்றத்திலும்
- முன்றிலும்
- ஆற்றின் நடுவிலும்
- மனையிலும்

முதலிய இடங்களில் வெறியாட்டு நிகழ்த்தியதனைச் சங்க இலக்கியங்கள் தெரிவிக்கின்றன.

வெறியாட்டுக் களம் என்ற சொல்லிருந்து வெறியாட்டிற்குரிய நிகழ்த்து முறையை அறியலாம். இதனை,

**"நெருப்பின்அன்ன பல்லிதழ் தாஅய்**
**வெறிக்களம் கடுக்கும் வியலறை தோறும்"[15]** **(மலைபடு. 149 – 150)**

என்னும் பாடல் வரிகளில் வெறியாட்டக் களத்திற்குரிய இயல்பை முன்வைக்கின்றன.

## வேலன் வெறியாட்டு

வேலனுக்கு நடத்தக் கூடிய வெறியாட்டு களமானது இரத்தக்கறை படிந்து, இருக்கும். ஏனென்றால் வேலனுக்கு பலியிடுதல் நடக்கும். ஆனால் மலைபடுகடாமில் வெறியிட்டு நிகழ்ந்ததைப் போன்ற உவமையை காணலாம்.

காந்தள் பூ சிவப்பு நிறத்தில் பூத்திருந்தது. அதனைப் புலால் (கறித்துண்டு) என்று கருதி எடுத்துச் சென்ற கழுகு உண்ணாமல் கீழே உதிர்த்தது. அவைகள் அகன்ற பாறைகளில் விழுந்து நெருப்புப் பிழம்புகள் போலக் கிடந்தனஇ மணலில் உதிர்ந்தவை மணம் பரப்பிக் கொண்டிருந்தன. முருகனை வேண்டி வெறியாடிய களத்தில் புலவுத் துண்டுகள் ஆங்காங்கே கிடக்கும். அதுபோலக் காந்தள் பூக்கள் பாறைமேல் பூத்துக் கிடந்தது வேலனின் வெறியாட்டுக் களம் போல் காட்சியளித்தன என்பதனை,

**"தீயி னன்ன ஒண் செங் காந்தள்.......**
**தூவற் கலித்த புதுமுகை ஊன்செத்து**
**அறியா தெடுத்த புன்புறச் சேவல்**
**ஊஉ னன்மையி னுண்ணா**
**துகுத்தென**
**நெருப்பி னன்ன பல்லிதழ் தாஅய்**
**வெறிக்களம் கடுக்கும் வியலறை தோறும்**
**மண இல் கமழு மாமலைச் சாரல்"[16]** **(மலைபடு. 145 – 150)**

என்னும் பாடலடிகளின் வாயிலாக அறிய முடிகிறது.

வெறியாட்டு நிகழ்த்தும் போது வேலனுக்கு ஆட்டினை பலி கொடுத்த செய்தியை குறிஞ்சிப்பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்தாகும். இதனை,

**".........நெடுவேள்**
**அணங்குறு மகளிர் ஆடுகளங் கடுப்பத்**
**திணிநிலை......."[17]** **(குறிஞ்சிப். 174 – 176)**

என்னும் பாடலடிகளில், கார்கால மழைக்காலத்தின் போது பெரிய தும்பிக்கையை உடைய யானையானது கோபம் கொண்ட

காரணத்தால் ஓடி வருகிறது. அதன் காரணமாக யானையை தாக்க முற்படும் போது யானை ஓடியது. யானை ஓடிய அந்த இடமானது முருக கடவுளுக்குத் தெய்வம் தீண்டித் துன்பமுற்ற பெண்களுக்கு அத்துன்பம் தீரும் பொருட்டு ஆடு வெட்டிப் பலிகொடுத்து வெறியாட்டு நடத்திய இடம்போல இருந்தது, இன்றும் வெறியாட்டின் போது இன்னிசைக் கருவிகள் முழங்க ஆடலும், பாடலும் நிகழ்வது வழக்கமாக இருக்கிறது. மனிதர் மேல் தெய்வம் ஏறி வருவதுண்டு என்ற நம்பிக்கையின் தொடர்ச்சியாக இன்றும் பூசாரிகள் சாமியாடி வருவதைக் காணமுடிகிறது.

பெரும்பாலும் நோய் ஏற்பட்டாலும், உடல் நலம் கொட்டலும், தெய்வத்தின் குறையாகவே கருதிப் பூசை செய்வது சங்க கால மக்களின் வழிபாடாக இருந்துள்ளது. இதனை,

**"அருங்கடி வேலன் முருகொடு வளைஇ**
**அரிக் கூடு இன்னியம் கறங்க தேர் நிறுத்துக்**
**கார்மலர்க் குறிஞ்சி சூடி கடம்பின்**
**சீர்மிகு நெடுவேள் பேணித் தழூஉப்பிணையூஉ"[18]** **(மதுரைக். 611 – 614)**

என வரும் மதுரைக்காஞ்சி பாடல் வரிகளில், துன்பம் அனைத்தும் முருகனால் வந்தது என வேலன் கூற, தான் கூறிய அச்சொல்லின் கண்ணே கேட்போரை வளைத்துக் கொண்டு அரித்தெழும் ஓசையையுடைய இனிய வாத்தியங்கள் ஒலிக்க, கார்காலத்து முருகனைச் செல்விதாகத் தன் மெய்யின் கண் நிறுத்தி வழிபாடு மேற்கொண்டுள்ளனர். மகளிர் தம்முள் தழுவிக் கைக் கோர்த்து குரவையாடுவர் என்பதனையும் அறிய முடிகிறது.

வெறியாட்டு முருகக் கடவுளுக்கு நிகழ்த்துவதாகும். இக்கடவுளுக்கு உகந்த காந்தள் ஆகும். இம்மலரால் வெறியாட்டுக்களம் பரவி இருந்தமையை குறிப்பிடுகின்றது.

## வட மலையாளத்தில் வேலன் வெறியாட்டு

திருமுருகாற்றுப்படையில் கூறப்படும் "வேலன் வெறியாட்டு வழிபாட்டின் சில கூறுகள் இன்றும் மலையாள நாட்டில் வேலன் என்ற பழங்குடியினரின் (Sheduled Tribe) தெய்வ வழிபாட்டில் காண முடிகிறது. இந்த வேலன்மார் வட மலையாள நாட்டில் (North Malabar) பூசாரிகளாக உள்ளனர். அவர்கள் தெய்வங்களைச் சாந்தி செய்யும் பொருட்டு பிற இனத்தினரால் அவ்வாறு அழைக்கப்படுகின்றனர் என்று பி. எல் சாமி குறிப்பிட்டுள்ளார்.

## முடிவுரை

தெய்வத்தைப் போற்றுவது என்பது அச்சத்தால் ஏற்பட்ட ஒன்று. தகாத செயல் செய்பவரையும், தீய செயல்களைச் செய்வதையும் தெய்வம் வருத்தும் என்று நம்பினர். அதன் விளைவாகவே தெய்வங்கள் உருவாகின. இலக்கியங்களில் கொற்றவையின் மகனாகவே முருகன் அறியப்படுகின்றார். அச்சம் தரும் கடவுள்களில் இருந்து சற்று மாறுபட்டதாக முருகு என்னும் கடவுள் கருதப்பட்டது. அது முருகன், நெடுவேள், சேய் எனப் பல பெயர்களால் அழைக்கப்பட்டது. மலைச்சாரலில் ஐவனம், தினை முதலிய தானியங்களைப் பயிரிட்டு வாழ்ந்திட்ட குன்றக்குரவர்கள் மலையில் உறைந்த கடவுளான முருகுவை வழிபட்டனர். பத்துப்பாட்டில் முருகனுடைய வாழிடம், வழிபாட்டு முறை ஆகியன பதிவு செய்யப்பட்டுள்ளன.

## அடிக்குறிப்பு

1. தொல்காப்பியம், 951
2. திருமுருகாற்றுப்படை, 72–75
3. மேலது, 125
4. மேலது, 124 – 125
5. அகநானூற்று, 266: 20–21
6. மேலது, 1:4
7. மேலது, 61:15-16
8. திருமுருகாற்றுப்படை, 175–176
9. மேலது, 188–189
10. மேலது, 194–199
11. மேலது, 314–317
12. மேலது, 218–219
13. மேலது, 232–234
14. தொல்காப்பியம், 1009
15. மலைபடுகடாம், 149–150
16. மேலது, 145–150
17. குறிஞ்சி, 174–176
18. மதுரைக்காஞ்சி, 611–614

## துணை நூற்பட்டியல்

1. சாமி, சிதம்பரனார். *பத்துப்பாட்டும் பண்டைத்தமிழரும்*. சென்னை, ஸ்ரீ செண்பகா பதிப்பகம், 2021.
2. இரா, மோகன், உரையாசிரியர். *பத்துப்பாட்டு மூலமும் உரையும் முதற்பகுதி*. சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 2004.
3. பி எல், சாமி. *சங்க நூல்களில் முருகன்*. சென்னை, சேகர் பதிப்பகம், 1990.

## References


1. Sami, Chidambaranar. *Batupattum Pandaithamizharum*. Chennai, Sri Senpaha Publishing House, 2021.
2. Ira, Mohan, Text editor. *Batutpattu Source and Text Part One*. Chennai, New Century Book House (B) Lit, 2004.
3. PL, Sami. *Murugan in Sangha texts*. Chennai, Shekhar Publishing House, 1990.


**How to cite this article:** S, Manimegalai. "Murugan in Ten Idylls (Pathupattu)". *Aazhi International Journal of Tamil Literature Studies*, vol. 1, no. 1, Jan. 2023, pp. 27-32, https://aijtls.com/index.php/aijtls/article/view/8.

This is an open access journal, and articles are distributed under the terms of the Creative Commons Attribution-Non Commercial-ShareAlike 4.0 International License, which allows others to remix, tweak, and build upon the work non-commercially, as long as appropriate credit is given and the new creations are licensed under the identical terms.